அம்பத்துூர் மாவட்ட உரிமையியல் நீதிமன்றம்

O.S.No. 327/2019

இந்த நீதிமன்றத்து உதவியாளர் திருமதி.உ. தாரணி என்பவரால் பிரமாணம் செய்விக்கப்பட்டு வாதி/ பிரதிவாதி தரப்பின் சாட்சியின் வாக்குமூலம் 1873ம் ஆண்டின் 10வது சட்டத்தில் வகை முறைகளுக்கு உட்பட்டு 2026ம் ஆண்டு மார்ச் திங்கள் 06-ம் நாளில் பதிவு செய்யப்பட்டது.

| | |
|---|---|
| வா.சா.1 | 06.03.2026 |
| பெயர் செல்வமணி | தந்தை/ கணவர் பெயர் |
| தொழில் | வயது |
| இனம் | சமயம் |
| கிராமம் | வட்டம் |

<u>குறுக்கு விசாரணை</u>:-

1. வழக்கின் 1ம் பிரதிவாதி எனது உடன்பிறந்த சகோதரி என்றால் சரிதான். என் கணவர் பெயர் ராமசந்திரன். 1ம் பிரதிவாதியின் கணவர் பெயர் சந்திரன் என்றால்சரிதான். மேற்கூறிய ராமசந்திரன் மற்றும் சந்திரன் இருவரும் உடன்பிறந்தவர்கள் என்றால் சரிதான். அவர்கள் தந்தை பெயர் சோமு என்றால் சரிதான். பிரதிவாதிகள் அனைவரும் எனது உறவினர்கள் என்றால் சரிதான். நான் 5ம் வகுப்பு வரை படித்துள்ளேன். தமிழ் மற்றம் ஆங்கிலம் எழுதபடிக்க தெரியாது. நான் தாக்கல் செய்த பிராது விவரங்கள் தெரியுமா என்றால் வழக்கறிஞர் சொல்லி தெரியும். பிராது பரிகாரம் என்ன கேட்டுள்ளேன் என்றால் இடம் வேண்டும் என்று சொல்லிகேட்டுள்ளேன்.

2. தாவா சொத்து ஆதியில் என்மாமனார் சோமு என்பவருக்கு

பாத்தியப்பட்டது என்றால் சரிதான். சோமு இறந்தபிறகு அவரது மகன்கள் ராமசந்திரன் மற்றும் சந்திரன் சொத்தை சரிபாதியாக பிரித்துக்கொண்டார்கள் என்றால் சரிதான். இந்த வழக்கில் கூர்சீட்டு மூலமாக சொத்தை பிரித்துக்கொண்டதாக சொல்லியுள்ளேனா என்றாலும் அந்த கூர்சீட்டை தாக்கல் செய்யவில்லை என்றால் இல்லை. என் கணவருக்கு ஒதுக்கப்பட்ட பாகத்தை வா.சா.ஆ 3 செட்டில்மென்ட் ஆவணம் மூலம் எனக்கு கொடுத்துவிட்டார் என்றால் சரிதான்.

3.வா.சா.ஆ. 3 சான்றிட்ட நகல் என்றாலும் அசல் ஆவணம் என்னிடம் உள்ளது என்றால் சரிதான். நீதிமன்றத்தில் ஒப்படைத்துவிட்டேன் என்று சாட்சி மீண்டும் கூறினார். சந்திரன் 2007 ல் இறந்தபிறகு 1,2,4 முதல் 8 பிரதிவாதிகள் சொத்தை 3ம் பிரதிவாதிக்கு எழுதிகொடுத்தார்கள் என்ற விவரம் எனக்கு தெரியுமா என்றால் சொன்னார்கள் நேரடியாக தெரியாது. என்னிடம் காட்டப்படும் ஆவணம் சந்திரனுக்கு ஒதுக்கப்பட்ட பட்டா என்றால் சரிதான். (**சந்திரன் பெயரில் உள்ள பட்டா நகல் பி.சா.ஆ 1 ஆக குறியீடுசெய்யப்படுகிறது. வாதிதரப்பு வழக்கறிஞர் நகல் குறியீடுசெய்யப்படுகிறது என்று ஆட்சேபணை தெரிவித்துள்ளார். சாட்சி ஆவணத்தை ஒப்புக்கொண்டுள்ளதால் அது குறியீடுசெய்யப்படுகிறது.)**

4, என்னிடம் காட்டப்படும் ஆவணம் சந்திரனின் இறப்பு சான்றிதழ் என்றால் சரிதான். (**சந்திரன்இறப்பு சான்றிதழ் நகல் பி.சா.ஆ 2 ஆக குறியீடுசெய்யப்படுகிறது. வாதிதரப்பு வழக்கறிஞர் நகல் குறியீடுசெய்யப்படுகிறது என்று ஆட்சேபணை தெரிவித்துள்ளார். சாட்சி ஆவணத்தை ஒப்புக்கொண்டுள்ளதால் அது குறியீடுசெய்யப்படுகிறது.)** என்னிடம் காட்டப்படும் ஆவணம் சந்திரனின் வாரிசு சான்றிதழ். (**சந்திரன் பெயரில் உள்ள வாரிசு சான்றிதழ் நகல்**

**பி.சா.ஆ 3 ஆக குறியீடுசெய்யப்படுகிறது. வாதிதரப்பு வழக்கறிஞர் நகல் குறியீடுசெய்யப்படுகிறது என்று ஆட்சேபணை தெரிவித்துள்ளார். சாட்சி ஆவணத்தை ஒப்புக்கொண்டுள்ளதால் அது குறியீடுசெய்யப்படுகிறது.)**

5. எனது கணவருக்கு ஒதுக்கப்பட்ட இடத்தில் பழையவீட்டை இடித்துவிட்டு புதுவீட்டை கட்டியுள்ளோம் என்றால் சரிதான். சந்திரனுக்கு ஒதுக்கப்பட்ட இடத்தில் அவர்கள் வீடுகட்டி குடியிருக்கிறார்கள் என்றால் சரியல்ல. என்னுடைய இடத்திலும் சேர்த்து வீடுகட்டிவிட்டார்கள். அவ்வாறு நான் என்பிராதில் சொல்லவில்லை என்றால் சரியல்ல. தற்போது பிரதிவாதிகள் எங்களுக்கு பிரச்சனை கொடுக்கவில்லை என்றால் சரிதான். வீட்டின் கீழ்பகுதியில் பிரதிவாதிகள் இருக்கிறார்கள். மேல்பகுதியில் நாங்கள் குடியிருக்கிறோம். இடித்து தரவேண்டும் என்று கூறிய கட்டிடத்தை அவர்கள் இடித்து தரவில்லை. தற்போது நாங்கள் குடியிருக்கும் மேற்பகுதிக்கும் சேர்த்து பிரதிவாதிகள் பஞ்சாயத்தில் பெயர் கொடுத்துவிட்டார்கள். தற்போது அவர்கள் பிரச்சனை செய்யவில்லை.

6. பிராது பேரா 4ல் தாவா சொத்தின் பகுதி Let out செய்யப்பட்டதாக குறிப்பிட்டுள்ளேன் என்றாலும் நான் பிரதிவாதகளுக்க லீஸ்க்கு விட்டுள்ளேன் என்றாலும் லீஸ் க்கு வாடகைக்கு எதுவும் விடவில்லை. கூர்சீட்டு பிரகாரம் சந்திரன் மற்றும் ராமசந்திரனுக்கு சொத்து சரிபாதியாக பிரிக்கப்பட்டது என்றால் சரிதான். 18.10.2019 அன்று வீடுகட்டிட வேலை நடக்கும் போது பிரதிவாதிகள் இடையூறு செய்தார்களா என்றால் இல்லை. பிராது சங்கதிகள் வழக்கறிஞர் தயார் செய்து என்னிடம் கையொப்பம் பெறப்பட்டது என்றால் சரிதான் நான் வழக்கு விவரங்கள்சொல்லி அவர் தயார் செய்தார். நான் தாவா சொத்தில் வீடுகட்டி வசித்து வருகிறேன் என்றால் சரிதான். தற்போது பிரதிவாதிகள் பிரச்சனை எதுவும்

செய்தார்களா என்றால் வீடுகட்டி முடித்துவிட்டதால் நாங்கள் அனுபவித்து வருகிறோம். நான் பிரதிவாதிக்கு எதிராக வீடுகட்டும்போது பிரதிவாதிஎந்த இடையூறும் செய்யக்கூடாது என்று நிரந்தர உறுத்துக்கட்டளை பரிகாரம் கோரியுள்ளேன் என்றால் தற்போது நான் வீடுகட்டி முடித்துவிட்டதால் நான் கோரிய பரிகாரம் நிலைக்கதக்கது அல்ல என்றால் சரியல்ல. நான் விளம்புகை பரிகாரம் அல்லது இடம் வேண்டும் என்று பரிகாரம கோராததால் வழக்கு தள்ளுபடி செய்யவேண்டும் என்றால் சரியல்ல.

இத்துடன் குறுக்கு விசாரணை முடித்துக்கொள்ளப்படுகிறது, மறு விசாரணை இல்லை.